# தமிழ் - இடைநிலைக் கல்வி

# (அக மதிப்பீடு) Tutor Marked Assignment

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) மருது பாண்டியர்கள் குறித்து எழுதுக. (பாடம் 12)

   (ஆ) சுயஉதவிக் குழுவின் நோக்கம் குறித்து எழுதுக. (பாடம் 32)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) உமது தெருவில் மின் விளக்கு வசதி வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் வரைக. (பாடம் 14)

   (ஆ) வேலை வேண்டி விண்ணப்ப கடிதம் எழுதுக. (பாடம் 31)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) குற்றால மலை அழகினை வருணித்து எழுதுக. (பாடம் 16)

   (ஆ) கொடைக்கானலின் அழகை வருணித்து எழுதுக. (பாடம் 15)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) தேசிய விழாக்களும் ஒருமைப்பாட்டுணர்வும் குறித்து கட்டுரை வரைக. (பாடம் 17)

   (ஆ) கீழே உள்ள பகுதியினைச் சுருக்கி வரைக. (பாடம் 18)

   தொல்காப்பியம் மக்கள் வாழ்க்கையினை அகம், புறம் என இருவகையாகப் பகுத்து விளக்குகின்றது. ஒத்த அன்புடைய கணவனும் மனைவியும் கலந்து வாழும் வாழ்வு அகவாழ்வாகும். இங்ஙனம் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் ஒன்றி வாழ்வதற்குரிய அரசியல் வாழ்வு புறவாழ்வாகும்.

அகவாழ்வு களவு, கற்பு என இருவகைப்படும். யாருக்கும் தெரியாத நிலையில் ஒருவரை ஒருவர் சந்தித்து வாழும் நிலை களவு எனப்படும். கற்பு என்பது இருவரது பெற்றோரும் உடன்பட்டுத் திருமணம் முடிக்கும் நிலை கற்பு எனப்படும்.

புறவாழ்வு ஐவகை நிலங்களின் பாற்பட்டது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. காடும் பசும் புல்வெளிகளும் சேர்ந்த இடம் முல்லை எனப்பட்டது. குறிஞ்சியின் ஒரு பகுதியும் முல்லையின் ஒரு பகுதியும் சூரியனின் வெப்பத்தால் பாலை நிலம் தோன்றும். கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் ஆயிற்று. மக்கள், மரங்கள், விலங்குகள், பறவைகள், நீர்நிலைகள், ஊர்கள், இசைக்கருவிகள், மக்களுடைய தொழில்கள் முதலியவற்றைத் தனித்தனியே எடுத்துக் கூறியுள்ளனர். விலங்குகள், பறவைகள், பொழுது முதலியன மக்கள் வாழ்வில் எங்ஙனம் பயன்பட்டன என்பதையும் விளக்கியுள்ளார்.

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) நாட்டுப்புறக் கலைகள் குறித்து கட்டுரை வரைக. (பாடம் 18)
   (ஆ) வங்கியில் பணம் எடுக்கும் படிவத்தை நிரப்பும் வழிமுறைகளை விளக்குக. (பாடம் 9)
6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6
   (அ) விளையாட்டுத் துறை வீரர் ஒருவரை பேட்டி கண்டதுபோல் எழுதுக. (பாடம் 33)
   (ஆ) பின்வரும் கதையினைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. (பாடம் 35)

வாய்ப்பு

கிரேக்க நாடு ஓவியத்திற்கும் சிற்பத்திற்கும் பெருமை வாய்ந்தது. அத்தகைய புகழ்வாய்ந்த கிரேக்க நாட்டின் மன்னர் தமது நாட்டில் வாழ்ந்த சிற்பிகளுக்குச் சிலைவடிக்கும் ஒரு போட்டியை அறிவித்தார். நாட்டிலுள்ள சிற்பிகள் அனைவரும் இப்போட்டியில் கலந்துகொண்டு கட்டாயமாகச் சிலை செய்யவேண்டும் என்று மன்னர் ஆணை பிறப்பித்தார். சிற்பிகளுக்கெனச் சிலை செதுக்குவதற்காக அரண்மனையில் தனி இடம் தரப்பட்டது. கால அவகாசமாகப் பதினைந்து நாட்கள் கொடுக்கப்பட்டன.

போட்டியில் கலந்துகொண்ட சிற்பிகளுள் வயது முதிர்ந்த சிற்பி ஒருவரும் இருந்தார். அவர் மிகச் சிறந்த அறிவாளி. அவர் என்ன சிலை செய்யப்போகிறார் என்பதைக்காண அரசரும், மக்களும் ஆவலாகக் காத்திருந்தனர். அரசர் தினந்தோறும் சிற்பிகள் சிலைசெய்யும் இடத்திற்கு வந்து பார்வையிட்டுச் செல்வார். வயது முதிர்ந்த சிற்பியோ சிலை செய்வதற்கான பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. மன்னனுக்கு அவரது செயல் மிகுந்த ஆச்சர்யத்தை அளித்தது. மன்னன்

அறிவித்த கடைசி நாளும் வந்தது. சிற்பிகள் தங்களது சிலைகளை மன்னரின் பார்வைக்கு வைத்தனர்.

மன்னர் ஒவ்வொரு சிலையாகப் பார்த்துப் பாராட்டிக்கொண்டே வந்தார். அழகான பெண்... தாவி ஓடும் மான்... என அனைத்து வகையான சிற்பங்களும் ஒன்றை ஒன்று அழகில் மிஞ்சும் வண்ணம் இருந்தன. அரசர் வயது முதிர்ந்த சிற்பியின் சிற்பத்திற்கு அருகில் வந்தார். அந்தச் சிலையோ வெள்ளைத் துணியைக் கொண்டு மூடப்பட்டிருந்தது. அரசர் அந்தத் துணியை விலக்கினார் அங்கே... சிலையைக் கண்ட மன்னர் அழகற்ற அந்தச் சிலையைக் கண்டு கோபமடைந்து சிற்பியே என்ன இது? சிலை செதுக்கச் சொன்னால் அழகற்ற உருவத்தைச் செதுக்கி இருக்கிறீரே எனக் கேட்டார். அந்தச் சிலையானது கழுகின் முக அமைப்பும், மனித உடலும் கொண்டு விளங்கியது. கழுகின் தலைப்பகுதியின் முன்பக்கம் வழுக்கையாகவும், பின் பக்கத்தில் நீண்ட உச்சிக்கொண்டையும் செதுக்கப்பட்டிருந்தன. உடலின் மீது இரண்டு இறக்கைகள் இருந்தன.

மன்னரின் கோபத்தைக் கண்ட வயதான சிற்பியோ அரசே இந்தச் சிலையின் பெயர் வாய்ப்பு. இந்த வாய்ப்பு எனும் பறவை ஒவ்வொரு மனிதனின் முன்பும் சென்று பறக்கிறது. விழிப்புடன் இருக்கும் மனிதன் அதன் உச்சிக்கொண்டையை நன்கு பிடித்து வாய்ப்பைத் தன்னுடன் வைத்துக் கொள்கிறான். ஆனால், சோம்பேறியோ பறவையின் முன் வழுக்கையைப் பிடித்து வாய்ப்பை நழுவ விடுகிறான் என விளக்கம் தந்தார்.

சிற்பியின் விளக்கத்தைக் கேட்டு மனமகிழ்ந்த மன்னர் அறிவாளியான சிற்பிக்கே பரிசளித்திருப்பார் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

(அ) கிரேக்க மன்னர் அறிவித்த போட்டி யாது?

(ஆ) வயது முதிர்ந்த சிற்பி தனது சிலைக்கு வைத்த பெயர் யாது?

(இ) வாய்ப்பை நழுவ விடுபவன் என்ன ஆவான்?

----------------